

# தாளவாடியில் 289 பேருக்கு நலத்திட்ட உதவி: நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்

**சத்தியமங்கலம், டிச. 11**

தாளவாடி தாலுக்கா அலுவலகத்தில் வருவாய்த்துறை சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கோபி ஆர்டிஓ திவ்யா பிரியதர்ஷினி தலைமை தாங்கினார். தாசில்தார் ரவிசங்கர் வரவேற்றார். விழாவில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா கலந்து கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

இதைத் தொடர்ந்து, 198 பேருக்கு கணினி வழி பட்டா, 44 பேருக்கு முதியோர் உதவித்தொகை, 3 பேருக்கு முதிர் கன்னி உதவித்தொகை, 24பேருக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகை, 20 பேருக்கு குடும்ப அட்டைகள் என மொத்தம் 289 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 7 லட்சத்து 98 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில், ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம், தாளவாடி ஒன்றிய செயலாளர்கள் சிவண்ணா, நாகராஜ், கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி 15வது வார்டில் ரூ.5,30,000 லட்சம் மதிப்பீட்டில் காந்திநகர் பிரதான சாலையில் புதிய கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினை சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார்.

# மொடக்குறிச்சி அரசு பள்ளியில் ரூ.19 லட்சத்தில் வகுப்பறை கட்டிடம்: சரஸ்வதி எம்எல்ஏ திறந்து வைத்தார்

**ஈரோடு, டிச. 11–**

**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் ரூ.19 லட்சம் மதிப்பிலான அரசு பள்ளி கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் சி.கே.எஸ். சரஸ்வதி ரிப்பன் வேட்டி திறந்து வைத்தார்.**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி வட்டம், சிவகிரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதியின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி மூலம் கட்டப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில், பாரதீய ஜனதா கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் வி.சி. வேதானந்தம், கொடுமுடி மேற்கு ஒன்றிய தலைவர் கே.ஆர். செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்க மாவட்ட விவசாய அணி துணை தலைவர் முருகானந்தம், மாவட்ட ஊடகப் பிரிவு செயலாளர் கோவிந்தராஜ்,

ஒன்றிய செயலாளர் பைக் பழனிசாமி, சிவகிரி பேரூர் தலைவர் கொரடா சங்கர், நெசவாளர் பிரிவு தலைவர் நாச்சிமுத்து, ஒன்றிய விவசாய அணி தலைவர் ரமேஷ் பொன்வேல், ஒன்றிய துணைத் தலைவர் சுரேஷ், கிளைத் தலைவர் சுப்பிரமணி, ஆசிரியர் குமரேசன், மகளிர் அணி வேதநாயகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# நேரு சர்வதேச பள்ளி தாளாளர் சைதன்ய கிருஷ்ணகுமார் கௌரவிப்பு

**கோவை, டிச. 11–**

கோவை கஸ்தூரி கல்வியியல் கல்லூரி மற்றும் கஸ்தூரி மேலாண்மை கல்லூரியின் 8வது பட்டமளிப்பு விழாவில் கணினி அறிவியலில் பிஎட் பட்டம் பெற்ற நேரு சர்வதேச பள்ளியின் தாளாளர் டாக்டர் சைதன்ய கிருஷ்ணகுமாருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கஸ்தூரி கல்வியியல் கல்லூரி மற்றும் கஸ்தூரி மேலாண்மை கல்லூரியின் 8வது பட்டமளிப்பு விழா மேலாண்மை கல்லூரி அறங்காவலர் நிக்கிதா வி.ஷா தலைமையில் நடைபெற்றது.

கஸ்தூரி கல்வியியல் கல்லூரியின் முதல்வர் என்.கஸ்தூரி மற்றும் கஸ்தூரி மேலாண்மைக் கல்லூரி முதல்வர் எம்.செல்வராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றி, ஆண்டு அறிக்கையை வாசித்தனர்.

நிகழ்ச்சியில் கஸ்தூரி கல்வி நிறுவனங்களின் தாளாளர் விஜயகுமார் ஏ.ஷா தலைமை உரையாற்றினார்.

அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி.ரவி, சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

281 பி.எட். மாணவர்கள் மற்றும் 32 மேலாண்மை மாணவர்கள் உட்பட மொத்தம் 313 மாணவர்கள் பட்டம் பெற்றனர். மேலும், சிறப்பிடம் பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, பாடம் வாரியாக முதல் இடம் பெற்றவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களையும் துணைவேந்தர் ஜி.ரவி வழங்கி கௌரவித்தார்.

பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து, கஸ்தூரி கல்வியியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் எஸ்.உமாராணி தலைமையில் முன்னாள் மாணவர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் முன்னிலையில் மாணவர்கள் உறுதிமொழி எடுத்து கொண்டனர். நேரு கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியும், செயலாளருமான பி.கிருஷ்ண குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.



# ஜேகேகேஎன்எஸ் ஓம்சரவணா பிறந்த நாளை முன்னிட்டு பல்த்துறை மருத்துவ முகாம்

**குமாரபாளையம், டிச. 11**

குமாரபாளையம் ஜேகேகேஎன் கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் ஜேகேகேஎன்எஸ் ஓம்சரவணாவின் பிறந்த நாளை முன்னிட்டு ஜேகேகே நடராஜா நினைவு இயக்கம் சார்பில் இலவச பலதுறை மருத்துவ பரிசோதனை ஆலோசனை மற்றும் சிகிச்சை முகாம் ராமர் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

கண் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை காது மூக்கு தொண்டை சிகிச்சை எலும்பு முறிவு மற்றும் மூட்டு சிகிச்சை, நுரையீரல் செயல்திறன் பரிசோதனை, பல் சிகிச்சை பரிசோதனை என பலதுறை மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் அரசு தனியார் மருத்துவமனை டாக்டர்கள் பங்கேற்று பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர்.

ஜேகேகே ரெங்கம்மாள் அறக்கட்டளை மற்றும் தி ஐ பவுண்டேசன் சார்பில் கண் பரிசோதனை செய்யப்பட்டு உயர்தரமான கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மேலும், தேவையான நபர்களுக்கு ரூ.1200 மதிப்புள்ள நுரையீரல் திறன் பரிசோதனை இலவசமாக செய்யப்பட்டது. இந்த இலவச பலதுறை மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

இந்த பல்துறை மருத்துவ முகாமை ஜேகேகேஎன் கல்வி நிறுவனங்களின் தலைவர் செந்தாமரை, நிர்வாக இயக்குனர் ஓம்சரவணா ஆகியோர் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினர்.




# "மாணவர்களின் லட்சியப்பாதையில் ஊன்றுகோலாக செயல்பட வேண்டும்"

## பேராசிரியர்களுக்கு பாவை கல்வி நிறுவன தலைவர் என்.வி.நடராஜன் அறிவுறுத்தல்

**ராசிபுரம், டிச. 10–**

**பாவை கல்விக் குழுமத்தில் புதியதாக பேராசிரியர்களாக பணியில் இணைந்துள்ளவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது.**

பாவை கல்வி நிறுவனங்களில் புதியதாக பேராசிரியர்களாக பணியில் இணைந்துள்ள பேராசிரியர்களுக்கு நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சி நிகழ்ச்சிகு, பாவை கல்வி நிறுவனங்களின் தலைவர் என்.வி.நடராஜன் தலைமை தாங்கினார்.

கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் மேம்பாடு துறையின் முதன்மையர் கே.செல்வி அனைவரையும் வரவேற்றார்.

தாளாளர் மங்கை நடராஜன் குத்துவிளக்கேற்றி, வாழ்த்துரை வழங்கினார்.

தலைவர் என்.வி.நடராஜன் பேசியதாவது:–

'இந்தப் புத்தாக்கப்பயிற்சியானது புதிய பணிச்சூழலின் கலாச்சாரத்தையும், அடிப்படை தத்துவத்தையும், மதிப்பீடுகளையும் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

அதனோடு ஆசிரியர்களின் பொறுப்புகள், கடமைகள், மாணவர்களை கையாளும் விதம், அறிவுசார் திறன்கள் போன்றவைகள் பற்றிய தெளிவினைப் பெற்று, உங்கள் ஆற்றலை வளர்த்துக் கொண்டு, புதிய நிறுவனத்திற்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளவும் உதவிபுரிகிறது.

உன்னதமான ஆசிரியப்பணியில் உள்ள நீங்கள் மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்வின் நோக்கத்தினை அவர்களுக்கு நன்கு உணர வைத்து ஒவ்வொரு மாணவ, மாணவிகளுடைய இலட்சியப்பாதையின் ஊன்றுகோலாக செயல்பட வேண்டும். நீங்கள் அனைவரும் குழு மனப்பான்மையுடன், ஒற்றுமையோடு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும்" என்று பேசினார்.

தொடர்ந்து ஆசிரியர் மேம்பாடு துறையின் தலைவர் முர்சிதா பானு புத்தாக்கப்பயிற்சியினை பற்றிய முன்னுரை வழங்கினார். நிகழ்ச்சியில் பாவை கல்வி நிறுவனங்களின் முதன்மையர் (ஆலோசனை) ஜெயலெட்சுமி, அனைத்து கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக**

**நிறுவன மனு எண் : CP (CAA) / 54 (CHE) / 2023**

(நிறுவன மனு எண் : CA / CAA / 36 (CHE) 2023 உடன் இணைக்கப்பட்டுள்ளது)

2013, நிறுவன சட்டம் பிரிவு 230 முதல் 240 வரை மற்றும் பிற பொருத்தமான பிரிவுகளின்படியான வழக்கு சம்பந்தப்பட்டது

மற்றும்

**ஓய்மர் டெக்னாலஜி இந்தியா பிரைவேட் லிமிடெட் (டிரான்ஸ்ஃபரர் கம்பெனி), உடன் ஹைட்ராஸ்பெக்மா இந்தியா பிரைவேட் லிமிடெட் (டிரான்ஸ்பெரி நிறுவனம்) உடனான திட்ட ஏற்பாடு (சேர்த்தல்)**

**ஹைட்ராஸ்பெக்மா இந்தியா பிரைவேட் லிமிடெட்**
1956, நிறுவன சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு
ஜி பி 130 அ. க்ரீன்பேஸ் இண்டஸ்ட்ரியல் அண்ட் லாஜிஸ்டிக்ஸ் பார்க், வடக்குப்பட்டு கிராமம், குன்றத்தூர் தாலுகா, காஞ்சிபுரம் – 603204.
தமிழ்நாடு–இல் பதிவு அலுவலகத்தை கொண்டது
அதன் **இயக்குனர் திரு.முனுசாமி சந்திரசேகரன் வெங்கடேஷ் குமார் (இ அ எண் : 03632918)** அவர்களை பிரதிநிதியாக கொண்டது

... **விண்ணப்பதாரர் நிறுவனம் / டிரான்ஸ்பெரி நிறுவனம்**

**அறிவிப்பு**

27–ஆம் தேதி அக்டோபர் 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு 22–ஆம் தேதி நவம்பர் 2023 ஆணைப்படி அனுமதிக்கப்பட்ட **ஓய்மர் டெக்னாலஜி இந்தியா பிரைவேட் லிமிடெட் (டிரான்ஸ்ஃபரர் கம்பெனி),** உடன் **ஹைட்ராஸ்பெக்மா இந்தியா பிரைவேட் லிமிடெட் (டிரான்ஸ்பெரி நிறுவனம்)** உடனான **திட்ட ஏற்பாடு (சேர்த்தல்)** மனுவின் ஒப்புதலுக்கான நிறுவனங்கள் சட்டம் 2013–இன் 230 முதல் 240 வரையுள்ள பிரிவுகளின் கீழ்வரும் தனி மனுவானது தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்பாக 18–ஆம் தேதி ஜனவரி, 2024 அன்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி, மனுவை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எந்த நபரும், அவரின் பெயர் மற்றும் முகவரியுடன் அவரால் அல்லது அவரின் வழக்கறிஞரால் கையொப்பமிட்ட தன் நோக்கத்திற்கான அறிவிப்பை மனு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் தேதிக்கு முன்பாக பதினைந்து நாட்களுக்குள் கிடைக்குமாறு மனுதாரரின் வழக்கறிஞருக்கு அனுப்ப வேண்டும். மனுவை எதிர்க்க விரும்புவர் எதிர்ப்பின் காரணங்கள் அல்லது அவரின் பிரமாண வாக்கு மூலத்தின் நகல் ஒன்று அத்தகைய அறிவிப்புடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மனுவின் நகலானது, கீழே கையொப்பமிட்டவரால், தேவைப்படும் எவருக்கும், அதற்கான பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்கள் செலுத்திய பின் வழங்கப்படும்.

சென்னை 7–ஆம் தேதி, டிசம்பர், 2023 தேதியிடப்பட்டது.

**ஏ.எம். இளங்கோ,**
மனுதாரரின் வழக்கறிஞர்,
சூட் எண்: 103, முதல் தளம், காவேரி காம்ப்ளெக்ஸ்,
96/104, நுங்கம்பாக்கம் ஹைரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

**நொடித்தல் மற்றும் திவால்நிலை தொகுப்பு 2016–ன் கீழ் விற்பனை அறிவிப்பு**

**மெசர்ஸ் எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் – கலைப்பில் உள்ளது**
(CIN: L24110AP1988PLC009291)

**பதிவு அலுவலகம்: அய்யப்பரெட்டிபாலம், நாயுடுபேட்டை மண்டல், நெல்லூர் மாவட்டம், ஆந்திரபிரதேசம் – 524 126, இந்தியா**

**கலைப்பாளர் அலுவலகம்: அலுவலக எண்.58, 3வது குறுக்கு, வினாயக் நகர், ஹெப்பல், பெங்களூரு 560 024. மொபைல்: 9845002523 | 080 2390 2344**
e-mail: plan@psri.in ; ip.empee@gmail.com

**நொடித்தல் மற்றும் திவால்நிலை தொகுப்பு 2016–ன் கீழ் இ–ஏலம்**
**இ–ஏலத் தேதி மற்றும் நேரம் : திங்கட்கிழமை, ஜனவரி 8, 2024 அன்று மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை**
**(ஒவ்வொன்றும் 10 நிமிட வரம்பில்லா நீட்டிப்புடன்)**

கலைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மெசர்ஸ் எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் – கலைப்பில் உள்ளது (கார்ப்பரேட் கடனாளி) சொத்துகளை விற்பனை செய்ய கலைப்பாளரை நியமித்து, மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், அமராவதி அமர்வு 10.02.2023 அன்று உத்தரவிட்டது. நேஷனல் இ–கவர்னன்ஸ் சர்வீசஸ் லிமிடெட் (NeSL) மூலம் கீழ்கையொப்பமிடப்பட்டவர்களால் https://nesl.co.in/auction-notices-under-ibc/என்ற இணைய இணைப்பில் ''உள்ளது உள்ளபடி'', ''எங்கே உள்ளதோ அங்கேயே'', ''எந்தவித மாற்றமும் இல்லாமல்'' விற்பனை செய்யப்பட உள்ளது.

| பிளாக் | ஆஸ்தி விவரங்கள் | ரிசர்வ் விலை (ரூ. கோடியில்) | டேவணித் தொகை டெபாசிட் (ரூ. கோடியில்) | அதிகரிப்பு மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | நிலம் (உத்தேசமாக 240 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது) மற்றும் கட்டிடத்துடன் முக்கூடல் கிராமம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ள அம்பாசமுத்திரம் யூனிட் விற்பனை: **தற்போது உள்ள நிலையில் நிறுவனத்தின் ஒரு பகுதியாக மேற்கண்ட சொத்துக்களைப் வாங்குவதற்கான விருப்பத்துடன் (மற்ற சொத்துக்களில் சில உரிமைகள் மற்றும் செயல்படக்கூடிய உரிமைகோரல் ஆகியவை அடங்கும், செயல்முறை குறிப்பில் இது குறித்து விவரங்கள் உள்ளன)** | 17.00 | 1.70 | 0.10 |

**முக்கிய குறிப்புகள்:**

1. பார்வையிடும் தேதி : டிசம்பர் 27, 2023 முதல் ஜனவரி 4, 2024 வரை
2. இ–ஏலத்தின் மூலம் சொத்துக்கள் விற்பனையானது ''உள்ளது உள்ளபடி'', ''எங்கே உள்ளதோ அங்கேயே'', ''எந்தவித மாற்றமும் இல்லாமல்'' கண்டிப்பாக விற்பனை செய்யப்படும்.
3. இந்த அழைப்பு வருங்கால ஏலதாரர்களை அழைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் விற்பனையை செயல்படுத்துவதற்கு கலைப்பாளர் அல்லது நிறுவனத்தின் தரப்பில் எந்த விதமான பிணைப்புக் கடமையையும் உருவாக்கவில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கலைப்பு நடைமுறையின்படி தனது விருப்பத்திற்கேற்ப இ–ஏலத்தின் காலக்கெடு உட்பட ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீட்டிக்க/ ஒத்திவைக்க/ரத்துசெய்ய மற்றும்/அல்லது மாற்றியமைக்க மற்றும் எந்தவொரு முன் அறிவிப்பும் இன்றி அல்லது ஏலத்தின் எந்த நிலையிலும் எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் எந்த ஏலத்தையும் நிராகரிக்க கலைப்பாளருக்கு உரிமை உண்டு.
4. டேவணித் தொகையை சமர்ப்பித்தல் மற்றும் பங்கேற்பதற்கு முன் இ–ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து விதிமுறைகள், நிபந்தனைகளை அறிந்துகொள்வது கட்டாயமாகும். சொத்துகள் குறித்த விவரங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஆன்லைன் இ–ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஏலப் படிவம், தகுதி அளவுகோல்கள், ஏலதாரர்களின் உறுதிமொழி ஆவணம், டேவணித் தொகை டெபாசிட் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான இ–ஏல செயல்முறை தகவல் ஆவணம் https://nesl.co.in/auction-notices-under-ibc/ and www.psri.in/escl/–ல் கிடைக்கும்.
5. பங்குதாரர்களின் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, கார்ப்பரேட் கடனாளியின் அம்பாசமுத்திரம் யூனிட்டை விற்க அல்லது அம்பாசமுத்திரம் யூனிட் உட்பட தற்போதுள்ள கார்ப்பரேட் கடனாளியின் நிறுவனத்தை முழுமையாக விற்பனை செய்யும் உரிமையை கலைப்பாளர் பெற்றுள்ளார். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள இ–ஏல செயல்முறை தகவல் ஆவணத்தைப் பார்க்கவும்.
6. ஏலம் தொடர்பான ஆவணங்கள் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களில் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் அசல் பிரதிகள் கலைப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
7. ஏலதாரர்கள், தங்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன், சொத்து ஆவணம், உள்ளூர் வரிகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம், பராமரிப்பு கட்டணம், ஏதேனும் இருந்தால், தங்கள் சொந்த செலவில் சொத்தை ஆய்வு செய்து தங்களைத் திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டும்.
8. அனைத்து ஏல ஆவணங்களுடன் விருப்ப கருத்துரு, திரும்பப்பெறத்தக்க பங்கேற்பு வைப்புத் தொகையுடன் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 26/12/2023.
9. டேவணித் தொகை டெபாசிட்டை சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 06/01/2024 அன்று அல்லது அதற்கு முன் ஆகும்.
10. இ–ஏலத் தேதி மற்றும் நேரம் : 08.01.2024 அன்று மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, ஒவ்வொன்றும் 10 நிமிட வரம்பில்லா நீட்டிப்புடன்.
11. உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்க உதவி தேவைப்படும் டேவணித் தொகை டெபாசிட்டை செலுத்திய ஆர்வமுள்ள விண்ணப்பதாரர், கலைப்பாளர் அலுவலகத்தை 080 –2390 2344 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது ip.empee@gmail.com அல்லது plan@psri.in என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**பங்கஜ் ஸ்ரீவஸ்தவா**
**கலைப்பாளர் – எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்**
**தொடர்பு முகவரி : 58, 3வது குறுக்கு, வினாயக் நகர், ஹெப்பல், பெங்களூரு 560 024**
Regn No: IBBI/IPA-001/IP-P00245/2017-18/10474
AFA valid upto 23/11/2023
Ph: 080 2390 2344| ip.empee@gmail.com
psri@live.com.| www.psri.in/escl/

**தேதி : திங்கட்கிழமை, டிசம்பர் 11, 2023**
**இடம்: பெங்களூரு**